செ.வெ.எண்: 262 நாள்: 28.05.2009

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

## மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பள்ளித் தேர்வுகளில் சாதனை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தகவல்

தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட, மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பள்ளித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர் என மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது.

14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு கல்வி அளிக்கும் பணியை தொழிலாளர் துறையின் சார்பில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், கோயம்புத்தூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 17 மாவட்டங்களில் சிறப்புத் திட்டமாகிய தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் சுமார் 15,000 பேர் இந்த சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, படித்து வருகின்றனர். இந்தச் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் இரண்டு ஆண்டுகள் படித்து, பின்னர் முறையான அரசு பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். அவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவர்கள் அரசுப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தேர்ச்சியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த ஆண்டு நடைபெற்ற 12—ஆம் வகுப்பு தேர்வில் சி.சங்கர் என்ற மாணவர் 1113 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செங்கல் சூளையில் குழந்தைத் தொழிலாளியாக பணிபுரிந்து, இத்திட்டத்தின் மூலம் மீட்கப்பட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. சேலம் மாவட்டத்தில் கயிறு திரிக்கும் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட கோகிலா என்ற மாணவி 1027 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேலும் விருதுநகர் மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்த மாயக்கண்ணன் என்ற மாணவர் 1024 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளார். குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து மீட்கப்பட்டு, சிறப்புப் பள்ளிகளில் படித்து, பின் 12—ம் ஆம் வகுப்பு தேர்வு எழுதிய சேலம், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய

மாவட்டங்களைச் சேர்ந்த 7 மாணவர்கள் 1000 மதிப்பெண்களுக்கு மேல் பெற்று, சாதனைப் படைத்துள்ளனர்.

இதேபோன்று 10–ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் என். மீனா என்ற மாணவி 473 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர், பள்ளியில் சேர்ப்பதற்கு முன்பு கிருஷ்ணகிரியில் ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலில் குழந்தைத் தொழிலாளியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாமக்கல் மாவட்டத்தில் தறிப்பட்டறையில் இருந்து மீட்கப்பட்ட எம். ராமலிங்கம் என்ற மாணவர் 471 மதிப்பெண்களும், தீப்பெட்டி தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சிவகாசியைச் சேர்ந்த லலிதா என்ற மாணவி 470 மதிப்பெண்கள் பெற்று சாதனைப் படைத்துள்ளனர். 10–ம் வகுப்பு பொதுத் தேர்வில் 40 மாணவர்கள் 400 மதிப்பெண்களுக்கு மேல் எடுத்து தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

தறிப்பட்டறை, தீப்பெட்டித் தொழில், பட்டாசு தொழில், மில் வேலைகள், செங்கல் சூளை, பீடித் தொழில் மற்றும் வீடுகளில் இருந்து மீட்கப்பட்ட 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பலர் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் படித்து, முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, தற்பொழுது பல மாணவர்கள் கலைக்கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் படித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்தவர்கள் தமிழக அரசின் விரைவான நடடிக்கைகளால் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, நன்கு படித்து, தற்போது பலர் பள்ளி ஆசிரியர்களாகவும், காவல் துறை மற்றும் தனியார் துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற்கல்வி பயின்ற சிலர் தனியார் நிறுவனங்களில் நல்ல ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர்.

குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்காக அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு தரமான கல்வி அளிப்பதற்காக இலவசப் பாடப் புத்தகங்கள், மதிய உணவு, பேருந்துகளில் இலவச பயண அட்டை மற்றும் இலவச சீருடைகள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான ஜூன் 12–ல் சென்னையில் நடைபெறும் விழாவிற்கு பள்ளித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் எடுத்த சாதனை மாணவர்கள் வரவழைக்கப்பட்டு, கௌரவிக்கப்படவுள்ளனர். மேலும், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும் பணியில் சிறப்பாக செயல்பட்ட, மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஜூன் 12 அன்று விருதுகள் மற்றும் சான்றுகள் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

2/2